**செ. கு. எண்**:437 **நாள்**:06.12.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 6.12.2012

கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், ஓடந்துறை கிராமத்தைச் சேர்ந்த திரு. மனோகரன் என்பவரின் மனைவி ராஜேஸ்வரி 25.11.2012 அன்று உளிக்கல் சுற்று ஓடந்துறை ஒதுக்குக்காடு அருகே, காட்டு யானை தாக்கியதில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 28.11.2012 அன்று காலமானார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காட்டு யானை தாக்கியதில் அகால மரணமடைந்த ராஜேஸ்வரி குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இத்துயரச் சம்பவத்தில் காலமான திரு. ராஜேஸ்வரி குடும்பத்திற்கு வனத் துறை மூலம் மூன்று லட்சம் ரூபாய் உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**